செ.வெ.எண்: 613/2016 நாள்: 09.09.2016

# மலா், காய்கறி கருத்தரங்கு மற்றும் மலா் கண்காட்சி

கன்னியாகுமரி மாவட்டத்தில் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிா்கள் துறை சாா்பில் தேசிய தோட்டக்கலை இயக்கம் 2015 - 16 திட்டத்தின் கீழ் மாவட்ட அளவிலான மலா் மற்றும் காய்கறி கருத்தரங்கு மற்றும் மலா் கண்காட்சி செப்டம்பா் மாதம் 10 மற்றும் 11 (சனி மற்றும் ஞாயிறு) தேதிகளில் நாகா்கோவில் மகளிா் கிறிஸ்தவ கல்லூரியில் வைத்து நடைபெற உள்ளது. இக்கருத்தரங்கு மற்றும் கண்காட்சியினை கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவா் திரு. சஜ்ஜன்சிங் ரா. சவான் இ.ஆ.ப அவா்கள் துவக்கி வைத்து தலைமையுரை ஆற்ற உள்ளாா்கள். இந்த மலா் மற்றும் காய்கறி கருத்தரங்கு மற்றும் மலா் கண்காட்சியில், தோட்டக்கலைத்துறை, வேளாண்மைத்துறை, வேளாண் வணிகத்துறை, வேளாண் பொறியியல் துறை, மற்றும் இதர துறை அரசு அலுவலா்கள் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்க உள்ளாா்கள். பேச்சிப்பாறை, தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், தோவாளை மலா் ஆராய்ச்சி நிலையம், திருப்பதிசாரம், வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், மற்றும் திருப்பதிசாரம் வேளாண் அறிவியல் மைய விஞ்ஞானிகள் தொழில்நுட்ப உரை ஆற்ற உள்ளாா்கள். மேலும் இக்கருத்தரங்கு மற்றும் கண்காட்சியில் கன்னியாகுமரி மற்றும் பேச்சிப்பாறை அரசு தோட்டக்கலைப்பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் பழச்செடிகள் மற்றும் வாசனைத் திரவியப் பயிா்களின் நடவுச் செடிகள் விற்பனைக்கு வைக்கப்பட உள்ளது. மேலும் பூந்தொட்டிகள், தொட்டியில் வளா்க்கபட்ட காய்கறிச் செடிகள், மலா் அலங்காரம், மலா் கோலம், காய்கறி விளைச்சல், காய்கறி சிற்பம் அமைத்தல் போன்ற இனங்களில் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். தேசிய வேளாண்மை வளா்ச்சி திட்டத்தின் கீழ் மாடி வீட்டு தோட்டம் அமைப்பதற்கு தேவையான கிட்டுகள் வழங்கப்படுவதற்கு முன் பதிவும் நடைபெறுகின்றது. இக்கருத்தரங்கில் கலந்து கொள்வதற்கு மட்டும் முன்னுரிமை அடிப்படையில் பதிவு செய்யப்படும். மலா் கண்காட்சியை பொதுமக்கள், விவசாயிகள், பள்ளி, கல்லூரி மாணவ மாணவிகள், அனைவரும் பாா்வையிடலாம்.

கருத்தரங்கில் கலந்து கொள்ள முன்பதிவு செய்வதற்கு தங்கள் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகங்களை அணுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. கருத்தரங்கின் தொடர்ச்சியாக இரண்டாவது நாள் (11.09.2016) அரசு தோட்டக்கலைப்பண்ணை, கன்னியாகுமரியில் வைத்து வீட்டுக் காய்கறித் தோட்டம் மற்றும் மாடித்தோட்டம் அமைத்தல் மற்றும் குழித்தட்டு நாற்றங்கால் குறித்த செயல்விளக்கப் பயிற்சியும் தோவாளை மலர் ஆராய்ச்சி நிலையத்தில் வைத்து ஹெலிகோனியா சாகுபடி குறித்த செயல்விளக்கமும் செய்து காண்பிக்கப்பட உள்ளது. இக்கருத்தரங்கு மற்றும் கண்காட்சி நடைபெறும் இரண்டு நாட்களும் விவசாய பெருமக்கள் மற்றும் பொதுமக்கள் திரளாய் கலந்து கொண்டு பயன் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**தோட்டக்கலை துணை இயக்குநர்,**
**நாகர்கோவில்**

**மாவட்ட ஆட்சித் தலைவர்,**
**நாகர்கோவில்**

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.**